# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### அநியாய வட்டி விகித உயர்வை வாபஸ் வாங்க...

### நிலத்தை நிலமாகவே பிரித்துத் தர...

### செப்டம்பர் 22-ல் ஆர்ப்பரித்து ஆர்ப்பாட்டம்...

அருமைத் தோழர்களே,

சென்னையில் இயங்கும் டெலிகாம் கூட்டுறவு சொசைட்டியில் 15.06.2015 அன்று நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில், இது வரை கடனுக்கான வட்டியாக இருந்து வந்த 14.5 சதவிகிதத்தை 16 சதவிகிதமாக 01.07.2015 முதல் உயர்த்த முடிவெடுக்கப்பட்டு அமலுக்கு வந்துள்ளது. இந்த முடிவால் சொசைட்டி உறுப்பினர்களுக்கு மாதம் தோறும் பல நூறு ரூபாய்கள் அதிகமாக கட்டவேண்டிய அவலம் ஏற்பட்டது. சொசைட்டி உறுப்பினர்களுக்கு இந்த முடிவு பேரதிர்ச்சியாக இருக்கிறது.

**வட்டி உயர்வு தேவையா?**

சொசைட்டி நிர்வாகம் கடன் தொகையை 6 லட்சமாக உயர்த்திவிட்டு வட்டி விகிதத்தை 16சதமாக உயர்த்துவதற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடியை கை காட்டுகிறது. சொசைட்டி தலைவரும் நம் தோழர்களிடம் இதே காரணத்தை வட்டி உயர்விற்கு கூறினார். நரேந்திர மோடியின் நாசகர பொருளாதார கொள்கைகள் இந்திய நாட்டு உழைப்பாளிகள்,ஏழை எளிய விவசாய தொழிலாளிகள்,விவசாயிகள் மற்றும் நடுத்தர மக்கள் அனைவரைம் சிரமத்திற்குள்ளாக்குகிறது என்பது யதார்த்தபூர்வமான உண்மை. ஆனால் வட்டி உயர்விற்கு உண்மையான காரணம் என்ன? நமது கூட்டுறவு சொசைட்டி வேளாண் அமைச்சகத்தின் கீழ் வருகிறது என்பதனை நாம் அறிவோம் ஆனால் விவசாய சலுகை வட்டியில் கடன் பெறும் வசதி நமது சொசைட்டிக்கு ஒருபோதும் இருந்ததில்லை. எனவே சொசைட்டி தலைவர் வீர்ராகவனிடம் வட்டியை குறைக்கவேண்டும் என்று தமிழகத்தில் 4000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களிடம் கையெழுத்து பெற்று கொடுத்த போது இந்த வாதம் பொய்யானது என்று நமது தோழர்கள் கூறியுள்ளார்கள். இதில் வேதனை என்னவென்றால் ஒரு சில தொழிற்சங்கங்கள் கூட வட்டி உயர்விற்கு மோடியை கை காண்பிக்கும் வித்தையை செய்கின்றன. பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து தினம் தினம் போராடுகின்ற சங்கம் BSNL ஊழியர் சங்கம் தான் என்பது அனைவரும் அறிந்ததே. அதை மறைத்து BSNL ஊழியர் சங்கத்தின் மீது வீண்பழியை சில நபர்கள் செய்வது பரிதாபத்திற்குரியது.

வங்கிகளில் குறைந்த வட்டியில் கடனைப்பெற்று இதுவரை சுமார் 800க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சொசைட்டி கணக்கை முற்றிலும் முடித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கு 5 வருடத்திற்கு ரூ 47000/- சேமிப்பாகிறது. பணி ஓய்வு காரணமாக உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து வரும் வேளையில் உறுப்பினர்கள் சொசைட்டியிலிருந்து விலகுவது மேலும் சொசைட்டியை பின்னுக்குத் தள்ளும்.

தேசிய வங்கிகள் எல்லாம் இந்த ஜனவரி மாதத்திலிருந்து போட்டி போட்டுக்கொண்டு வட்டி விகிதத்தை குறைத்து வருகின்றன. இதற்கு அடிப்படையான காரணம் ரிசர்வ் வங்கி REPO Rate வட்டி விகித்ததை மூன்று முறை குறைத்ததே ஆகும். நாடு முழுவதும் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் வட்டி விகித்ததை குறைக்கும் போது நமது கூட்டுறவு சொசைட்டி மட்டும் வட்டி விகிதத்தை உயர்த்துவது அநியாயமாகும். எனவே தான் வட்டி விகிதத்தை குறைக்கவேண்டும் என்று வலுவாக குரல் எழுப்பியுள்ளோம்.

**வட்டி விகித்ததை குறைக்க முடியுமா?**

நிச்சயமாக முடியும். சமீபத்தில் சொசைட்டி நிர்வாகம் செய்யக்கூடிய வீண் செலவுகளை குறைத்தால் வட்டி விகிதம் நிச்சயம் குறையும்.
உதாரணமாக......

- RGB உறுப்பினர்களுக்கு செல் போன் வாங்குவதற்கு தலா ரூ10000/- வழங்கியது
- RGB உறுப்பினர்களுக்கு American Tourister சூட்கேஸ் வழங்கியது.
- பெங்களூரு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட கடனுக்கு மாதா மாதம் வரவு என்பது வெறும் 30 முதல் 35 சதமானமாக இருக்கும் போது பெங்களூருவில் கிளை திறப்பது என்பது தேவையான

ஒன்றுதான். ஆனால் அதற்காக பலலட்ச ரூபாய் செலவு செய்து ஆடம்பரமாக கிளை திறந்தது என்பது மிகுந்த கவலையளிக்கும் விசயமாகும்

- சென்னை சொசைட்டியில் இயக்குநர்கள் விவாதிக்க கோடிக்கணக்கில் செலவு செய்து அறை கட்டபட்டுள்ளது.

இதுபோல வீண்செலவுகள் செய்து கடனுக்கான வட்டியை உயர்த்துவது தேவைதானா என்பதே நமது அடிப்படையான கேள்வி.

எனவே தான் வட்டி விகிதத்தை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி கிளைகள் தோறும் ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விட்டுள்ளோம்.

**நிலத்தை நிலமாகவே பிரித்துத்தர...**

சொசைட்டி உறுப்பினர்களிடையே சென்னையில் உள்ள 88 ஏக்கர் நிலத்தை பிரித்துத் தரவேண்டும் என்ற வேட்கை அதிகமாக உள்ளது. இதற்கு உதாரணமாக சொசைட்டி உறுப்பினர்களிடையே நிலத்தை பிரித்துக் கொடுக்க விண்ணப்பம் கேட்டபோது 14919 விருப்ப விண்ணப்பங்கள் வந்ததே சாட்சியாகும். அடுக்குமாடி கட்டிடம் அடுக்கடுக்காய் ஊழலுக்கு வழிவகுக்கும் என்பதாலேயே நாம் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். இயக்குநர் குழுவில் நமக்கு ஒருவர் கூட இல்லை தான். ஆனால் சொசைட்டி உறுப்பினர்கள் பெருவாரியாக நம் பின்னே உள்ளனர் என்பதை சொசைட்டி நிர்வாகம் மறந்துவிடக்கூடாது. நிலத்தை நிலமாகவே பிரித்துக் கொடுக்க RGB கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவை மாற்றக்கூடாது. அப்படி மாற்றினால் அது சட்ட விரோதம் மட்டுமன்றி தார்மீக பொறுப்பையும் இழந்ததாகும். தமிழகத்தில் ஆண்டுதோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணி ஓய்வு பெறுகின்றனர். நிலம் வாங்க பெறப்பட்ட 15 கோடி கடனுக்கான அசலையும், 15.25 கோடி வட்டியையும் கட்டி வந்த உறுப்பினர்கள் எந்த பலனுமின்றி பணி ஓய்வு பெறுவது மிகுந்த வேதனைக்குரியது. சட்டியில் வெண்ணை இருந்தாலும் எடுக்கமுடியாத, அனுபவிக்க முடியாத வேலையை சொசைட்டி நிர்வாகம் செய்துவருகிறது. எனவே தான் நிலத்தை பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கிளைகள் தோறும் ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விட்டுள்ளோம்.

BSNL ஊழியர் சங்கம் சார்பாக வட்டி விகிதத்தை குறைக்கவும், நிலத்தை பிரித்து தரவும் தமிழகம் முழுவதும் நான்காயிரம் உறுப்பினர்களிடம் கையெழுத்து பெற்று சொசைட்டி தலைவர் வீரராகவனிடம் 19.08.2015 அன்று தோழர் அன்புமணி தலைமையில் கொடுத்தோம். நமது கோரிக்கையை சொசைட்டி நிர்வாகம் ஏற்கும் என்று காத்திருந்தோம். ஆனால் சொசைட்டி நிர்வாகத்திடம் எந்த அசைவும் இல்லை.

எனவே

**அநியாய வட்டி விகித உயர்வை வாபஸ் வாங்க வலியுறுத்தியும்,**
**நிலத்தை நிலமாகவே பிரித்துத் தர வலியுறுத்தியும்**
**செப்டம்பர் 22-ல் அனைத்து கிளைகளிலும் வலுவான ஆர்ப்பாட்டம் நடத்திடுவோம்.**

**தோழமையுடன்**

**A.பாபு ராதாகிருஷ்ணன்**
**மாநிலச்செயலாளர்.**